 04698 [redacted]

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

NEW/OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இவ்வினாத்தாள் **A, B, C** ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது. **பகுதி A பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கான** பொதுவான வினாக்களையும், **பகுதி B பழைய பாடத்திட்டத்திற்கான** வினாக்களையும், **பகுதி C புதிய பாடத்திட்டத்திற்கான** வினாக்களையும் கொண்டது.
- ※ பகுதி **A** இல் **1** முதல் **25** வரையான அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக. **பகுதி B, பகுதி C** ஆகியவற்றில் **ஒரு பகுதியை மாத்திரம்** தெரிவுசெய்து **26** முதல் **50** வரையான அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி A

**1.** தொடர்பாடல் செயன்முறையில் 'வலியுறுத்தலின்' முக்கியத்துவத்தை கூறியிருந்தவர் பின்வருபவர்களில் யார்?
(1) வில்பர் ஷ்ராம் (2) ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட் (3) எட்வேர்ட் சப்பியர்
(4) ஷனொன் மற்றும் வீவர் (5) ஹரோல்ட் லாஸ்வெல்

**2.** செய்தியொன்றில் உள்ள குறியீடுகள் பொருட்கோடல் செய்யப்படுவதால் புரிந்து கொள்ளப்படுவது
(1) குறிமுறையவிழ்ப்பு ஆகும். (2) குறிமுறையாக்கம் ஆகும்.
(3) மொழிபெயர்ப்பு ஆகும். (4) அறிக்கையிடல் ஆகும்.
(5) பின்னூட்டம் ஆகும்.

**3.** ஊடகச் செய்திகளுக்கும் கருத்துருவாக்கத் தலைவர்களுக்கும் இடையிலான உறவு விளக்கப்படுவது
(1) அனுபவக் களம் ஆகும். (2) சமூகமயமாதல் ஆகும்.
(3) வாயிற்காப்பு எண்ணக்கரு ஆகும். (4) இருபடி எண்ணக்கரு ஆகும்.
(5) தூண்டற்பேறு கோட்பாடு ஆகும்.

**4.** வெகுசன ஊடகப் பெறுநர்கள் தொடர்பில் உண்மையானது எது?
(1) பெறுநர்களின் வகிபங்கு செயற்படுதன்மையானது.
(2) நேரடியான பின்னூட்டம் தரப்படுகின்றது.
(3) விளங்கறிவு சமநிலையில் காணப்படும்.
(4) அது பல்தன்மையான ஒரு குழு ஆகும்.
(5) பரந்த மகிழ்ச்சிக் களம் காணப்படாது.

**5.** போலியான நுகர்வோர் தேவைகளை உருவாக்கும் பிரதான வெகுசன ஊடகப் புலம்
(1) வானொலி ஆகும். (2) சினிமா ஆகும்.
(3) தொலைக்காட்சி ஆகும். (4) இணையம் ஆகும்.
(5) சமூக ஊடகம் ஆகும்.

**6.** 'புத்தாக்கங்களின் பரவல்' என்ற அபிவிருத்தி எண்ணக்கருவை அறிமுகப்படுத்திய சமூகவியலாளர் பெயர் யாது?
(1) வில்பர் ஷ்ராம் (2) டட்லி சியர்ஸ் (3) மகாத்மா காந்தி
(4) விமல் திசாநாயக்க (5) எவரெட் எம். ரோஜர்ஸ்

[பக். 2 ஐப் பார்க்க

7. அபிவிருத்தி அடிப்படையில், இரண்டாம் உலக நாடாக வகைப்படுத்தப்படும் நாடு எது?
(1) கனடா (2) அவுஸ்திரேலியா (3) நியூசிலாந்து
(4) சோவியத் ரஷ்யா (5) ஐக்கிய இராச்சியம்

8. பின்வருவனவற்றுள் எந்த ஊடகம் காட்சிக் குறியீடுகளை வலுவாகவும் படைப்பாக்கத்துடனும் பயன்படுத்துகின்றது?
(1) தொலைக்காட்சி (2) சுவரொட்டி (3) சினிமா
(4) புகைப்படம் (5) ஓவியம்

9. வாய்மொழி சாராத தொடர்பாடல் பற்றிய சரியான கூற்று எது?
(1) உடல் மொழியால் மாத்திரம் நிகழ்த்தப்படுவது
(2) சைகை மொழியை மாத்திரம் பயன்படுத்துவது
(3) எழுதும்போது அது பயன்படுத்தப்படுவதில்லை.
(4) உடல் மொழியின் அர்த்தம் நாட்டுக்கு நாடு வேறுபட முடியும்.
(5) மேளம், சைரன் போன்ற ஒலிகள் உள்ளடக்கப்படுவதில்லை.

10. குறியீடுகள்
(1) நடனத்துடன் தொடர்புடையவை.
(2) வாய்மொழித் தொடர்பாடலையும் கடந்து செல்பவை.
(3) இன்னொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை.
(4) மதச் சிந்தனைகள் தொடர்பாடப்படுவதற்கு உதவுபவை.
(5) காட்சிகளைப் பிரதிநிதிப்படுத்துபவை, ஒலிகளை அல்ல.

11. ஆளிடைத் தொடர்பாடல் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது நேருக்கு நேர் நிகழ்த்தப்பெற முடியும்.
(2) எப்போதும் தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடியாது.
(3) வாய்மொழிசாராத் தொடர்பாடல் வழியாக வலுப்படுத்தப்படலாம்.
(4) குழுத் தொடர்பாடலில் இடம்பெற முடியாதது.
(5) உணர்வுகளை அதிக வினைத்திறனுடன் வெளிப்படுத்தலாம்.

12. உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்று நிறுவனமொன்றின் தலைவரால் பணியாளர்கள் அறிந்து கொள்வதற்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தச் சூழலில் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் வடிவங்கள் எவை?
(1) முறைசார், எழுத்து, காட்சி வடிவங்கள்
(2) முறைசார், வாய்மொழிசாரா, எழுத்து வடிவங்கள்
(3) வாய்மொழிசாரா, காட்சி, முறைசாரா வடிவங்கள்
(4) எழுத்து, காட்சி, முறைசாரா வடிவங்கள்
(5) காட்சி, வாய்மொழிசாரா, முறைசார் வடிவங்கள்

13. "நீங்கள் கூற முனைபவற்றை விவசாயிகளிடம் தெளிவாகச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள்."
பின்வருபவர்களில் எவர் இங்கு வெளிப்படுத்தப்பட்ட சிந்தனையை ஒத்த தொடர்பாடல் வரைவிலக்கணத்தை உருவாக்கியிருந்தார்?
(1) சார்ள்ஸ் கூலி (2) வில்பர் ஷ்ராம் (3) எட்வேர்ட் சப்பியர்
(4) குளோட் ஷெனொன் (5) ஹரோல்ட் லாஸ்வெல்

14. பாடசாலையை அழகுபடுத்துவதற்கு நிதியைத் திரட்டுவதற்கு மாணவர்கள் விரும்பியிருந்தனர். அதற்காக, ஒரு ஸ்ரிக்கரை வடிவமைக்க அவர்கள் கலந்துரையாடினர். பின்வரும் தொடர்பாடல் வகைகளில், எது இந்தச் சந்தர்ப்பத்தை விவரிக்கின்றது?
(1) வாய்மொழித் தொடர்பாடல் (2) குழுத் தொடர்பாடல்
(3) ஆளிடைத் தொடர்பாடல் (4) பேச்சுத் தொடர்பாடல்
(5) படைப்பாக்கத் தொடர்பாடல்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**15.** வெகுசனத் தொடர்பாடலின் **ஆகக் குறைந்த** முக்கியமான பணி எது?
(1) பன்முகக் கருத்தியல்களை உருவாக்குவது
(2) சமூகமயமாதல்
(3) பெறுநர்களின் தேவைகளோடு ஒத்திருப்பது
(4) சமூக மரபுரிமைகளை ஊடுகடத்துவது
(5) சமூக வளர்ச்சிக்கான தூண்டலைத் தருவது

**16.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
பொதுசனத் தொடர்பு என்பது அதிகமாக
(1) ஓர் இருவழிச் செயன்முறையாகும்.
(2) சந்தைப்படுத்தல் செயன்முறையாகும்.
(3) முகாமைத்துவச் செயன்முறையாகும்.
(4) பிரசாரத்திலிருந்து வேறுபட்டதாகும்.
(5) நீண்டகாலப் பெறுதிகளை எதிர்பார்த்திருப்பதாகும்.

**17.** வெகுசன ஊடகச் செயன்முறையில், வெளித்தரப்பொன்றின் வழிகாட்டலின்றி நிகழப்பெறுவது
(1) பொறுப்புக்கூறல் ஆகும். (2) கடமைப் பொறுப்பு ஆகும். (3) மதிப்பீடு ஆகும்.
(4) ஒழுக்க நெறிமுறைகள் ஆகும். (5) கட்டுப்பாடு ஆகும்.

**18.** சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) குழுத் தொடர்பாடல் இரண்டு தரப்புக்களிடையே மாத்திரம் நிகழும்.
(2) ஆளிடைத் தொடர்பாடல் ஒருவழி ஆனதாக நிகழும்.
(3) ஆளுள் தொடர்பாடல் புலக்காட்சியைத் தவிர்க்கின்றது.
(4) குழுத் தொடர்பாடல் பெறுநர்களின் எண்ணிக்கையில் மாத்திரம் தங்கியிருக்கின்றது.
(5) ஆளிடைத் தொடர்பாடல் இரண்டு தரப்புக்களிடையே மாத்திரம் நிகழும்.

● பின்வரும் தகவல்களை **19 - 21** வரையிலான வினாக்களுக்குப் பயன்படுத்துக.
தொடர்பாடல் மாதிரிகள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.
A - ஹரோல்ட் லாஸ்வெல் மாதிரி
B - ஷெனொன் மற்றும் வீவர் மாதிரி
C - ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட் மாதிரி

**19.** குறிமுறையாக்கம் மற்றும் குறிமுறையவிழ்ப்பில் கவனஞ்செலுத்தும், ஆனால் ஓர் நேர்வழிச் செயன்முறையாகக் **காட்டப்படாத** தெரிவு
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) B மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) C மாத்திரம்

**20.** "வருணி, இந்தக் குறுகிய காலத்தில் நீங்கள் கொஞ்சம் பருமனாகி விட்டீர்கள். என்னுடைய கண்ணாடியைப் பயன்படுத்தாது, உங்களை என்னால் அடையாளங்காண முடியவில்லை. தொடர்பாடல் காரணிகளின் அடிப்படையில் இந்தக் கூற்றை விளக்குவதற்கு மிகப் பொருத்தமான தெரிவு
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) B மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

**21.** "சூழ்நிலையின் நன்மை, தீமைகள் இரண்டைப் பற்றியும் சீதா ஆழமாக ஆராய்ந்தார். தகவல்களைக் கவனமாக மதிப்பிட்டதன் பின்னர், சீதா இந்த முடிவுக்கு வந்தார்." இது விபரிக்க முடியுமாக அமைவது
(1) A இனைப் பயன்படுத்துவதனால். (2) A மற்றும் B இனைப் பயன்படுத்துவதனால்.
(3) B இனைப் பயன்படுத்துவதனால். (4) B மற்றும் C இனைப் பயன்படுத்துவதனால்.
(5) C இனைப் பயன்படுத்துவதனால்.

**22.** வெகுசன ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பிலான அடிப்படையான புரிதல் தொடர்புபடுவது
(1) கண்காணிப்புடன் ஆகும்.
(2) சமூகமயமாதலுடன் ஆகும்.
(3) தர்க்கரீதியான சிந்தனையுடன் ஆகும்.
(4) ஊடகப் பண்பாட்டுடன் ஆகும்.
(5) ஊடக விளங்கறிவுடன் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**23.** நாட்டார் ஊடகங்களின் பின்வரும் இயல்புகளைக் கருத்திற்கொள்க.

*A* - அது வழக்கமாக வாய்மொழி சார்ந்தது.

*B* - அது நிர்ணயிக்கப்பட்ட அடையாளத்தைக் கொண்டது.

*C* - அது ஒரு வடிவத்தை மாத்திரம் கொண்டது.

*D* - அந்தந்தப் பகுதிகளுக்குரியதாக விசேடமானதாகும்.

மேலுள்ள கூற்றுகளில் சரியானவை

(1) *A, B* ஆகியன மாத்திரம் (2) *A, D* ஆகியன மாத்திரம்
(3) *B, C* ஆகியன மாத்திரம் (4) *B, D* ஆகியன மாத்திரம்
(5) *C, D* ஆகியன மாத்திரம்

**24.** நிறுவனத்தின் வெளியகப் பொதுசனத் தொடர்புக்குப் பொருத்தமான கருவிகளையும் வழிமுறைகளையும் உள்ளடக்கியிருக்கும் தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) கண்காட்சிகள், புகைப்படங்கள், அனுசரணைகள், நேரடி அழைப்பு இலக்கங்கள்
(2) பிரசுரங்கள், நகரும் கண்காட்சிகள், செய்திமடல், அறிவித்தற் பலகை
(3) நலன்புரி அமைப்புக்கள், புகைப்படங்கள், கண்காட்சிகள், நேரடி அழைப்பு இலக்கங்கள்
(4) செய்திமடல், அறிவித்தற் பலகை, அன்பளிப்புக்கள் வழங்குதல், ஊடக சந்திப்புக்கள்
(5) நிகழ்வுகள் ஒழுங்கமைப்பு, நலன்புரி அமைப்புக்கள், புகைப்படங்கள், அனுசரணைகள்

**25.** ஊடகக் குவிகைக்குப் **பொருத்தமற்ற** கூற்று எது?

(1) பல்வேறு ஊடகங்கள் மையப்படுத்தப்படுதல்
(2) எண்ணிம வெளியில் வளர்ச்சி பெறுதல்
(3) பிரஜைகள் ஊடக வாய்ப்புக்களை மட்டுப்படுத்துதல்
(4) செய்தி விநியோகத்திற்கான பரந்த வெளியின் உருவாக்கம்
(5) இணைய நீட்சியின் வழியாக வெகுசன ஊடகங்கள் முன்னிலை பெறுதல்

## பகுதி B

**26.** பல்வேறு தகவல்களை ஆய்வுசெய்து, அவற்றைப் பெறுநர்களுக்கு முன்வைக்கும் வெகுசன ஊடகங்களின் கடமை எனப்படுவது

(1) தூண்டல் என்பதாகும். (2) பொருட்கோடல் என்பதாகும்.
(3) கண்காணிப்பு என்பதாகும். (4) இணைப்பாக்கம் என்பதாகும்.
(5) சமூகமயமாதல் என்பதாகும்.

**27.** அறிவினை மேம்படுத்தலில் பயன்படுத்தப்படும் உத்தி

(1) ஆழ்பரிவு ஆகும். (2) மையப்படுத்தல் ஆகும்.
(3) குறியீட்டாக்கம் ஆகும். (4) ஒன்றிணைத்தல் ஆகும்.
(5) பரீட்சார்த்தம் ஆகும்.

**28.** புதிய தாராண்மைவாதம் பற்றிய **பொய்யான** கூற்று எது?

(1) அது பூகோளமயமாதலின் ஒரு பேறாகும்.
(2) அது ஊடகங்கள் வழியாகச் செயற்படுகின்றது.
(3) அது தேசிய பொருளாதாரம் ஒன்றிற்கு இட்டுச் செல்கின்றது.
(4) மேலைத்தேய அதிகாரத்தை அது பிரசித்தப்படுத்துகின்றது.
(5) வர்த்தக அதிகாரத்தினால் அது கட்டுப்படுத்தப்படுகின்றது.

**29.** தொலைக்காட்சி விளம்பரமொன்றில் இளைஞன் ஒருவன் "குறித்த வியாபாரக் குறியினால் அடையாளப்படுத்தப்படும் குளிர்பானமொன்று இல்லாது உணவருந்த விருப்பம் இல்லை" எனக் கூறினான். இந்த விளம்பரம் குறித்து நிற்கும் பண்பாட்டு அம்சம்

(1) பண்பாட்டுத் தேக்கம் ஆகும். (2) பண்பாட்டு அதிர்வு ஆகும்.
(3) பண்பாட்டுப் பரிமாற்றம் ஆகும். (4) பிரசித்த பண்பாடு ஆகும்.
(5) பண்பாட்டுப் பரவுகை ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,

**30.** மொழி உள்வாங்கப்பெறுதல் தொடர்பில், நிலாவினி வகுப்பறையில் சில பார்வைகளை முன்வைத்தாள்.

*A* - மொழியைப் பயன்படுத்தும் தேர்ச்சி

*B* - அது உயிரியல் அடிப்படையைக் கொண்டிருக்கின்றது.

*C* - அது சமூகப் பண்பாட்டு அடிப்படையைக் கொண்டிருக்கின்றது.

*D* - பிறப்பால் அது நிர்ணயிக்கப்படுகின்றது.

மேற்படி கூற்றுக்களில் உண்மையானவை

(1) *A*, *C* ஆகியன மாத்திரம் (2) *B*, *C* ஆகியன மாத்திரம்
(3) *A*, *B*, *C* ஆகியன மாத்திரம் (4) *A*, *B*, *D* ஆகியன மாத்திரம்
(5) *B*, *C*, *D* ஆகியன மாத்திரம்

**31.** செய்தியொன்றின் படைப்பாக்கத்தன்மையை மதிப்பிடும் முக்கிய அம்சம்

(1) அதன் நிகழ்த்தப்பெறுதல் தரம் (2) அதன் எண்ணக்கருவாக்கத் தகைமை
(3) அதன் சுயமான தன்மை (4) அதன் ஒத்திசையும் தகைமை
(5) அதன் அகவயத் தன்மை

**32.** "எனது சகோதரனும் அவனுடைய நண்பர்களும் பேசிக்கொள்வதை என்னாலும் எனது சகோதரியினாலும் எப்போதும் புரிந்துகொள்ள முடிவதில்லை. வார்த்தைகளை நாம் புரிந்துகொண்டாலும், அர்த்தங்கள் பிரச்சினையாகவுள்ளன." இந்தப் பிள்ளை சந்திக்கும் சிக்கலான நிலைக்குக் காரணம்

(1) துணைப் பண்பாடு ஆகும்.
(2) சமூகமயமாதல் ஆகும்.
(3) எதிர்ப் பண்பாடு ஆகும்.
(4) அனுபவக்களம் ஆகும்.
(5) பண்பாட்டு ஒன்றிணைப்பு அல்லது உறுதுணை ஆகும்.

**33.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஒருவர் தன்னுடன் இணைந்திருக்கும் மக்களின் வகிபாங்கினை நிகழ்த்துதல்

B - முன்மாதிரிகளின் பண்புகளை ஏற்று அவற்றைக் கைக்கொள்தல்

C - ஒருவருடன் நெருக்கமாகி, அவரது அனைத்துத் தனிப்பட்ட நடத்தைக் கோலங்களையும் உள்வாங்குதல்

மேற்படி கூற்றுகளின்படி, சமூகமயமாதல் வழிமுறைகளை சரியான வரிசைக்கிரமத்தில் காட்டும் தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) வகிபாகமேற்றல், பின்பற்றுதல், போலச்செய்தல்
(2) வகிபாகமேற்றல், போலச்செய்தல், பின்பற்றுதல்
(3) போலச்செய்தல், பின்பற்றுதல், வகிபாகமேற்றல்
(4) போலச்செய்தல், வகிபாகமேற்றல், பின்பற்றுதல்
(5) பின்பற்றுதல், வகிபாகமேற்றல், போலச்செய்தல்

**34.** சுய எண்ணக்கரு பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பௌதிகத் தோற்றத்தில் தங்கியிருப்பது.
(2) விருத்திசெய்ய முடியுமானது.
(3) அது பிறப்பிலிருந்து வரும் அம்சமொன்றல்ல.
(4) அடுத்தவர்களால் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படும் விதம்.
(5) சமூகத்தில் ஒருவர் தனித்துவமான அடையாளத்தை விருத்திசெய்ய அனுமதிப்பது.

**35.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - 1 : பண்பாட்டுப் பரிமாற்றம்
2 : திட்டமிட்டும் அதேவேளை திட்டமிடப்படாமலும் நடைபெற முடியும்.

B - 1 : பண்பாட்டு ஆக்கிரமிப்பு
2 : வணிகரீதியான உள்நோக்கத்தைக் கொண்டிருக்காதது.

C - 1 : பண்பாட்டு அதிர்வு
2 : சொந்தப் பண்பாடுகளை அலட்சியப்படுத்துவதன் ஒரு பெறுதி

மேற்படி கூற்றுகளில் நேரடித் தொடர்பினைக் காட்டும் சோடி / சோடிகளைத் தெரிவுசெய்க.

(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம் (4) B மாத்திரம்
(5) B, C ஆகியன மாத்திரம்

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka , Department of Examinations Sri Lanka ,

**36.** டட்லி சியர்ஸ் கூறுவதன்படி, அபிவிருத்தியைப் பாதிக்கும் ஒரு விடயம்
(1) போஷாக்கின்மை ஆகும்.
(2) நம்பிக்கையற்றநிலை ஆகும்.
(3) தங்கியிருக்கும் மனப்பான்மை ஆகும்.
(4) தேசிய வேலைத்திட்டம் இல்லாதிருத்தல் ஆகும்.
(5) குறைந்த எழுத்தறிவு ஆகும்.

**37.** மொழி பற்றிய மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மானுட நடவடிக்கைகளை மொழி கட்டுப்படுத்துகின்றது.
(2) இனத்துவத்தின் ஒரு குறியீடாக மொழி அமையவில்லை.
(3) சிறுபராயத்தில் மாத்திரமே மொழி உள்வாங்கப்பெறுதல் இடம்பெறுகிறது.
(4) துணை மொழிகள் பிரதான மொழியை மாற்றத்திற்குள்ளாக்குவதில்லை.
(5) மொழியும் பண்பாடும் தூரநிலை உறவைக் கொண்டவை.

**38.** பின்வருவன அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத் திட்டமிடுவதுடன் தொடர்புடைய சில படிநிலைகள் ஆகும்.

*A* i. தரவு திரட்டுவதற்கான முறைகளைத் தீர்மானித்தல்
ii. தரவுகளை ஆராய்தல்

*B* i. ஆரம்பநிலைக் கலந்துரையாடல்
ii. தரவு திரட்டுவதற்கான முறைகளைத் தீர்மானித்தல்

*C* i. தரவுகளைத் திரட்டுதல்
ii. தரவுகளை ஆராய்தல்

*D* i. ஆரம்பநிலைக் கலந்துரையாடல்
ii. முதனிலை முடிவுகளை எட்டுதல்

பின்வருவனவற்றுள் சரியான வரிசையைக் கொண்டிருப்பது,
(1) *A*, *B* ஆகியன மாத்திரம் (2) *A*, *C* ஆகியன மாத்திரம்
(3) *B*, *C* ஆகியன மாத்திரம் (4) *B*, *D* ஆகியன மாத்திரம்
(5) *C*, *D* ஆகியன மாத்திரம்

**39.** நாட்டார் விளையாட்டுக்களின் ஒரு பண்பு, அவை
(1) சடங்குசார்ந்த அர்த்தத்தைக் கொண்டிருப்பதில்லை.
(2) விஞ்ஞானபூர்மான அடிப்படையைக் கொண்டிருப்பதில்லை.
(3) பொழுதுபோக்கினை விடவும் சமயம்சார்ந்த எண்ணக்கருக்களை அதிகம் கொண்டிருக்கின்றன.
(4) இறை வழிபாட்டுடன் மாத்திரம் ஆரம்பிக்கின்றன.
(5) பொருளாதார, சமூக வாழ்வியற் போக்குகளை எடுத்துக்காட்டுகின்றன.

**40.** பின்வருவன ஊடகப் பண்பாடு பற்றிய இரண்டு கூற்றுகளாகும்.
A - தற்காலத்தில் மானுட வாழ்வியற் போக்கினை வெகுசன ஊடகம் கட்டுப்படுத்துகின்றது.
B - ஊடகப் பண்பாடு புதிய சமூகத்தேவைகளை உருவாக்குகின்றது.
மேற்படி கூற்றுக்களில்
(1) A சரியானது மற்றும் B தவறானது
(2) A தவறானது மற்றும் B சரியானது
(3) A மற்றும் B இரண்டும் சரியானவை
(4) A மற்றும் B இரண்டும் சரியானவை; A, B ஐ விபரிக்கின்றது.
(5) A மற்றும் B இரண்டும் சரியானவை; B, A ஐ விபரிக்கின்றது.

**41.** அபிவிருத்தித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமொன்றில் ஆரம்பநிலைக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம், அது
(1) பிரச்சினையைத் தெளிவாக அடையாளப்படுத்துவதாகும்.
(2) சுற்றுச்சூழல் மதிப்பீடாகும்.
(3) காலச் சட்டகம் பற்றிய கலந்தாய்வாகும்.
(4) தரவு திரட்டும் முறைகள் பற்றிய விசாரணையாகும்.
(5) நிதி அனுசரணை பற்றிய கலந்தாய்வாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**42.** பின்வருவன வெகுசன ஊடகங்களின் இரண்டு பிரச்சினைகளாகும்.

- நாட்டின் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் வெகுசன ஊடக நிறுவனங்களிடையே ஒற்றுமை இருப்பதில்லை.
- வெகுசன ஊடகங்களின் சமூகப் பொறுப்புணர்வு பற்றிய புரிதல் ஊடகங்களுக்கு இருப்பதில்லை.

இப்பிரச்சினைகள் உருவாவதற்கான காரணம்

(1) ஊடக ஒழுக்கங்கள் தொடர்பில் புரிதல் இன்மையாகும்.
(2) ஆதிக்கத் தொடர்பாடல் எண்ணக்கருவின் செல்வாக்கு ஆகும்.
(3) ஊடகவியலாளர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் இன்மையாகும்.
(4) விருத்தியுற்ற வெகுசன ஊடகப் பண்பாடு இன்மையாகும்.
(5) சுயாதீன ஊடக எண்ணக்கரு உதாசீனஞ் செய்யப்படுவதாகும்.

**43.** நிலையற்ற தன்மை, உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாமை மற்றும் மீண்டும் மீண்டும் அதே சிந்தனைக்குள் ஆழ்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட உளநிலை அழைக்கப்படுவது

(1) உள அழுத்தம் அல்லது தகைப்பு (stress)
(2) மன உளைச்சல் (hatred)
(3) மனக்குழப்பம் (confusion)
(4) துருவநிலை (polaraization)
(5) பாதுகாப்பற்றநிலை (insecurity)

- பின்வரும் அட்டவணையை வினாக்கள் **44** மற்றும் **45** ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்குப் பயன்படுத்துக.

| X | Y |
|---|---|
| A - விமர்சனம் அல்லது திறனாய்வு | படைப்பாக்கக் கலை மீதான இரசனையுணர்வு |
| B - ஊடக விளங்கறிவு | தனிப்பட்ட வெளி மீதான இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பு |
| C - ஊடகப் பண்பாடு | பூகோள இருப்பு |
| D - பிரசித்த பண்பாடு | பண்பாட்டு அதிர்வு |

**44.** மேற்படி அட்டவணையில், **X** இனால் **Y** இன் நிலை உயரப்பெறுவது

(1) A இல்
(2) B இல்
(3) A மற்றும் B இல்
(4) A, B மற்றும் C இல்
(5) A, C மற்றும் D இல்

**45.** மேற்படி அட்டவணையில், **X** இனால் **Y** இன் நிலை கீழிறங்கப்பெறுவது

(1) A இல்
(2) B இல்
(3) C இல்
(4) A, B மற்றும் C இல்
(5) B, C மற்றும் D இல்

**46.** சமூக நலனுக்காக மாத்திரம் மரபுகள் உடைக்கப்படலாம் என்பதை வலியுறுத்தும் ஊடக விமர்சனப் பிரவேசம் பின்வருவனவற்றுள் எது?

(1) நல்லொழுக்கம் சார்ந்த பிரவேசம்
(2) மொழிசார் பிரவேசம்
(3) வரலாற்றுப் பிரவேசம்
(4) அரசியற் பிரவேசம்
(5) அழகியல்சார் பிரவேசம்

**47.** படைப்பாக்கப் பணியில் சுதந்திரம் என்பது

(1) ஒருவருடைய அனுபவங்கள் ஆகும்.
(2) ஒருவருடைய பணியின் வாயிலாக அவரது சொந்த அடையாளத்தை முன்வைப்பதாகும்.
(3) பெறுநர்களின் தேவைகளையும் நடத்தைகளையும் புரிந்து கொள்வதாகும்.
(4) ஒருவரது சொந்த படைப்பாக்கப் பணிகளை முன்வைப்பதாகும்.
(5) பெறுநர்மைய படைப்பாக்கங்களை முன்வைப்பதாகும்.

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

**48.** முரண்பாடொன்றில் தலையீட்டாளர் அல்லது மத்தியஸ்தரின் வகிபங்கு
(1) முரண்பாட்டில் நேரடியாகத் தலையிடுவதாகும்.
(2) இரு தரப்புக்களும் தமது அபிப்பிராயங்களைப் பேசிக்கொள்ள அனுமதித்தல் ஆகும்.
(3) இரு தரப்புக்களுடன் தனித்தனியாகக் கலந்துரையாடாமை ஆகும்.
(4) மூன்றாம் தரப்பாகச் செயற்படாதிருத்தல் ஆகும்.
(5) அழைப்பின்பேரில் மாத்திரம் ஈடுபாட்டினை மேற்கொள்வதாகும்.

**49.** பின்வருவன ஊடகங்கள் மற்றும் மொழிப் பயன்பாடு தொடர்பிலான சில கூற்றுகளாகும்.

| | |
|---|---|
| *A* - தொலைக்காட்சி | 1. நேரத்தைவிட வெளி பற்றிய கரிசனை அதிகம் |
| *B* - வானொலி | 2. எண்சார் தரவுகளை அதிகம் பயன்படுத்தக் கூடாது |
| *C* - அச்சு ஊடகம் | 3. சில சமயங்களில் எழுத்து பயன்படுத்தப்படல் |
| *D* - புதிய ஊடகம் | 4. சுருக்கமான வார்த்தைகள் அதிகம் பயன்படுத்தப்படல் |

சரியான சோடிசேர்ப்பு
(1) *A*1, *B*2, *C*3, *D*4
(2) *A*2, *B*3, *C*1, *D*4
(3) *A*3, *B*2, *C*1, *D*4
(4) *A*2, *B*1, *C*4, *D*3
(1) *A*3, *B*2, *C*4, *D*1

**50.** தொலைக்காட்சி நிறுவனமொன்றின் செய்திப்பிரிவினால் பின்வரும் கொள்கைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.
*A* - இரத்தம் சிந்தும் காட்சிகளை ஒளிபரப்பக்கூடாது.
*B* - அங்கவீனமுற்ற மனிதக் காட்சிகளை ஒளிபரப்பக்கூடாது.
*C* - விலங்குகளைத் துன்புறுத்தல் பற்றிய செய்திகள் நிராகரிக்கப்படும்.
*D* - இறைச்சி சம்பந்தமான பொருட்களுக்கான விளம்பரங்கள் இணைக்கப்படக்கூடாது.
மேற்படி கொள்கைகளை விபரிக்கும் சிறப்பான சொற்பதம் எது?
(1) தணிக்கை
(2) சட்ட எதிர்ப்புக்கள்
(3) ஊடக சுதந்திரம்
(4) சுய கட்டுப்பாடு
(5) பார்வையாளர்களின் பாதுகாப்பு

## பகுதி C

**26.** "மத சகவாழ்வின் ஊடாக மூன்றாம் உலகிலிருந்து விடுவிப்பு" என்ற அபிவிருத்தி எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியவர்
(1) எட்கர் ஒவன்ஸ்
(2) ஸ்ரீநிவாஸ் மெல்கோட்டே
(3) மகாத்மா காந்தி
(4) சில்வியோ வைஸ்போட்
(5) எவரெட் ரோஜர்ஸ்

**27.** திரைப்படமொன்று திரையிடப்படுவதற்கு முன்னர், அனுமதி பெற வேண்டிய நிறுவனம் எது?
(1) திரைப்படக் கூட்டுதாபனம்
(2) வெகுசன ஊடக அமைச்சு
(3) அரசாங்க திரைப்படப் பிரிவு
(4) பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
(5) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை

**28.** சட்டரீதியாக முன்வைக்கப்படும் கட்டுப்பாட்டுடன் ஊடக முகவர்களின் மத்தியஸ்த்தத்தையும் கொண்டிருப்பது
(1) சுய கட்டுப்பாடு
(2) ஊடகக் கட்டுப்பாடு
(3) கூட்டுக் கட்டுப்பாடு
(4) நிறுவனரீதியான கட்டுப்பாடு
(5) சட்டரீதியான கட்டுப்பாடு

**29.** ஊடகங்கள் வழியாக வெளியிடப்படும் தகவல்கள் யாவுமே ஞாபகத்திற்குட்படுவதோ, ஏற்றுக்கொள்ளப்படுவதோ அல்லது நிராகரிக்கப்படுவதோ இல்லை என ஆசிரியர் விளக்கினார். இது HUB மாதிரியின் அடிப்படையில்
(1) ஒழுங்காக்கி வழியாக விளங்கப்படுத்தப்பட முடியும்.
(2) வாயிற்காப்பு வழியாக விளங்கப்படுத்தப்பட முடியும்.
(3) குறிமுறை வழியாக விளங்கப்படுத்தப்பட முடியும்.
(4) வடிகட்டி வழியாக விளங்கப்படுத்தப்பட முடியும்.
(5) ஊடக விஸ்தீரணம் வழியாக விளங்கப்படுத்தப்பட முடியும்.

[பக். 9 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**30.** பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்ளவும்.

*A* - இலக்குகளை இனங்காணல்
*B* - பணியைத் திட்டமிடுதல்
*C* - பணி அமைப்பொழுங்கு
*D* - ஊடகப் பரப்புரைகளைக் கையாளுதல்

மேற்படி பணிகளில், நிகழ்வு முகாமையாளரின் வகிபங்குடன் நேரடியாகத் தொடர்புபட்டவை எவை?

(1) *A, B* ஆகியன மாத்திரம் (2) *A, B, C* ஆகியன மாத்திரம்
(3) *B, C* ஆகியன மாத்திரம் (4) *B, C, D* ஆகியன மாத்திரம்
(5) *C, D* ஆகியன மாத்திரம்

**31.** பின்வருவனவற்றுள் எவர் / எது ஊடக நிறுவனங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது தொடர்பில் பகுதியளவிலான நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்டுள்ளார் / கொண்டுள்ளது?

(1) பிரதம ஆசிரியர் (2) குறைகேள் அதிகாரி (Ombudsman)
(3) பத்திரிகைச் சபை (4) தன்னாட்சி அதிகாரி
(5) பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு

**32.** ஆய்வொன்றில் பெரும் சனத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தெரிவாகும் சிறிய பகுதி அழைக்கப்படுவது

(1) ஆகாரம் (2) தரவு (3) மூலம்
(4) மாதிரி (5) இடை

**33.** கிரஹம் வோல்ஸ் கூறுவதன்படி, படைப்பாக்கச் சிந்தனையின் படிமுறைகளாவன

(1) தயாரித்தல், அரும்பல், ஒளியூட்டல், சரிபார்த்தல்
(2) தயாரித்தல், அரும்பல், கிளர்வூட்டல், சரிபார்த்தல்
(3) அறியும் ஆர்வம், கிளர்வூட்டல், உருமாறுதல், தொடர்புகள்
(4) தயாரித்தல், அரும்பல், தொடர்புகள், சரிபார்த்தல்
(5) தயாரித்தல், அரும்பல், ஒளியூட்டல், கிளர்வூட்டல்

**34.** தனது மகன் நவீனை, வீட்டைச் சுத்தப்படுத்துவதற்கு உதவுமாறு தாய் வேண்டிக்கொண்டார். "தயவுசெய்து இப்போது வேண்டாம். இது எனக்குப் பிடித்த கார்ட்டூன் பார்ப்பதற்குரிய நேரம்" என தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த நவீன் பதிலளித்தான். பதிலின் உள்ளடக்கத்துடன் நேரடியாகத் தொடர்புபடுவது

(1) திசைதிருப்பல் (diversion) ஆகும். (2) அறிகை (cognition) ஆகும்.
(3) புலக்காட்சி (perception) ஆகும். (4) மீளப்பெறல் (withdrawal) ஆகும்.
(5) இணைப்பாக்கம் (correlation) ஆகும்.

**35.** முன்பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரையிலும், வயது வந்தோர் கல்வியிலும் ஊடகக்கல்வி அவசியம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற பிரகடனம் வெளியிடப்பட்ட இடம்

(1) ஜெனீவா பிரகடனம் (2) பாரிஸ் பிரகடனம்
(3) குரூன்வெல்ட் பிரகடனம் (4) கொழும்பு பிரகடனம்
(5) டெல்லி பிரகடனம்

**36.** கணக்கெடுப்பு ஆய்வைப் பயன்படுத்துவதன் ஒரு நன்மையாவது

(1) உண்மையான தகவல்களை எப்போதும் பெறமுடியும் என்பதாகும்.
(2) பழைய நிகழ்வுகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க முடியும் என்பதாகும்.
(3) சிக்கலான பிரச்சினைகள் தொடர்பில்கூட தனிப்பட்ட அபிப்பிராயங்களைத் திரட்ட முடியும் என்பதாகும்.
(4) பதிலளிப்பவர்கள் எப்போதும் பாரபட்சமற்ற தகவல்களை வழங்குவார்கள் என்பதாகும்.
(5) பெரும் எண்ணிக்கையான பதிலளிப்பவர்களிடமிருந்து தரவுகளைப் பெறலாம் என்பதாகும்.

**37.** பாடசாலைக் கல்வியை இலக்கு வைத்து, கல்வி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் நோக்குடன் இரண்டு புதிய ஒருங்கிணைக்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள் உருவாக்கப்பட்டன. இந்தப் போக்கு அழைக்கப்படுவது

(1) சிறுகூறுகளாக்குதல் என்பதாகும். (2) ஊடகக்குவிகை என்பதாகும்.
(3) நுகர்வுமயம் என்பதாகும். (4) துரித செய்தியனுப்புகை என்பதாகும்.
(5) கட்டுப்பாட்டுத் தளர்வு என்பதாகும்.

[பக். 10 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**38.** நீங்கள் எடுத்த புகைப்படமொன்றை, உங்களின் அனுமதியின்றி வேறொருவர் தனிப்பட்ட ஆதாயத்துக்காகப் பயன்படுத்துகிறார் எனக் கற்பனை செய்துகொள்க. அவ்வாறான சூழலில் உங்களுக்கு நீதி கிடைக்க முடியுமாக இருப்பது
(1) பத்திரிகை பேரவைச் சட்டத்தின் வழியாக.
(2) தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வழியாக.
(3) புலமைச் சொத்துச் சட்டத்தின் வழியாக.
(4) மனித உரிமைகளுக்கான அனைத்துலகப் பிரகடனத்தின் வழியாக.
(5) அரசியலமைப்பின் 14 (1) (a) பிரிவின் வழியாக.

**39.** தனது பரீட்சை முடிவுகளை அறியக் கிடைத்த சுரேஷின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் திரண்டது. சினிமாவில் இவ்வாறான ஒரு கணத்தைப் பதிவுசெய்துகொள்வதற்குச் சிறந்த வழியாக அமைவது
(1) ஒரு நீள் எடுப்பு
(2) ஒரு அண்மை எடுப்பு
(3) ஒரு இடைநிலை அண்மை எடுப்பு
(4) ஒரு இடைநிலை எடுப்பு
(5) மிக அண்மைநிலை எடுப்பு

**40.** பின்வருவனவற்றைக் கருதுக.
A - ஒரு முகாமைத்துவப் பணியாகும்.
B - நிறுவனத்தின் சுயவிபரத் திரட்டினை விருத்திசெய்யும் பணியாகும்.
மேற்படி கூற்றுகள் தொடர்புபட்டிருப்பது
(1) A - பொதுசனத் தொடர்புகளுடன், B - நிகழ்வு முகாமைத்துவத்துடன்
(2) A - நிகழ்வு முகாமைத்துவத்துடன், B - பொதுசனத் தொடர்புகளுடன்
(3) A மற்றும் B - இரண்டும், பொதுசனத் தொடர்புகளுடன்
(4) A மற்றும் B - இரண்டும், நிகழ்வு முகாமைத்துவத்துடன்
(5) A மற்றும் B - இரண்டும், பொதுசனத் தொடர்புகள், நிகழ்வு முகாமைத்துவம் ஆகிய இரண்டுடனும்

**41.** ஒரு குறித்த பொருளை விற்கும்போது, விலைக்கழிவு தொடர்பாக ஊடகம் வழியாக பிரசித்தப்படுத்துவது
(1) வியாபார பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(2) அரசாங்க பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(3) தொழில்சார் பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(4) ஊடக பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(5) நிறுவன பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.

**42.** படைப்பாக்கத் தொடர்பாடல் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கற்பனையாக்கம் படைப்பாக்கப் பணியொன்றை விருத்திசெய்யும் தகைமையாகும்.
(2) சுயமாக ஒன்றை உருவாக்குதல் தொடர் பயிற்சியினால் ஆகும்.
(3) மனதில் புதிய சிந்தனைகளையும் யோசனைகளையும் உருவாக்குவது உள்ளுணர்வு என அழைக்கப்படும்.
(4) இருக்கும் யோசனைகளை ஒருங்குசேர்ப்பது படைப்பாக்கச் சிந்தனை என அழைக்கப்படும்.
(5) ஒரு திறனை விருத்திசெய்யும் தொடர் பயிற்சி வழித்தோன்றுவது எனப்படும்.

**43.** திரைப்படமொன்றுக்கு 'U' சான்றிதழ் வழங்கப்படுவதானது, அத்திரைப்படம்
(1) வயது வந்தோருக்கு மிகப் பொருத்தம் என்பதனாலாகும்.
(2) வயது வந்தோருக்கு மாத்திரம் என்பதனாலாகும்.
(3) எல்லைகளற்ற பொதுமக்கள் திரையிடலுக்கானது என்பதனாலாகும்.
(4) 18 வயதிற்கு மேற்பட்ட எவருக்கும் என்பதனாலாகும்.
(5) 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் வயது வந்தோரின் துணையுடன் பார்வையிட முடியும் என்பதனாலாகும்.

[பக். 11 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka ,

- பின்வரும் அட்டவணையை வினாக்கள் **44** மற்றும் **45** ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்குப் பயன்படுத்துக.

கீழுள்ளது, கற்றலில் மாணவர்கள் எவ்வாறு ஈடுபட்டனர் என்பதற்கான ஓர் அட்டவணையாகும்.

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| நேரில் | 05 | 12 | 16 | 12 | 10 |
| இணையவழியில் | 15 | 08 | 04 | 08 | 10 |

**44.** குறித்த வாரத்தில், நேரிலும் இணையவழியிலும் பங்குபற்றிய மாணவர்களின் இடைப் பெறுமதி முறையே
(1) 05, 04 ஆகும். (2) 55, 45 ஆகும். (3) 12, 08 ஆகும்.
(4) 16, 04 ஆகும். (5) 11, 09 ஆகும்.

**45.** நேரிலும், இணையவழியிலும் கற்றலில் பங்குபற்றிய மாணவர்களின் ஆகாரப் பெறுமதிகளை எடுத்துக்காட்டும் நாட்கள் முறையே
(1) திங்கள் மற்றும் வியாழன் ஆகும். (2) புதன் மற்றும் திங்கள் ஆகும்.
(3) செவ்வாய் மற்றும் புதன் ஆகும். (4) செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகும்.
(5) புதன் மற்றும் வெள்ளி ஆகும்.

**46.** பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டவுடன், மீனா தனது முடிவுகளைப் பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்திற்குச் சென்று, உள்நுழைவு பெற்று அறிந்தாள். அந்தச் சூழலில் அவளுக்கு உதவிய புதிய ஊடகத்தின் பண்புகள்
(1) வலையமைப்பாதல், அதிவேகச் செய்தியனுப்புகை, தரவுத்தளம்
(2) மீயுரை, அதிவேகச் செய்தியனுப்புகை, தரவுத்தளம்
(3) வலையமைப்பாதல், இடைத்தொடர்பாக்கம், மீயுரை
(4) தானியங்கி, மீயுரை, வலையமைப்பாதல்
(5) இடைத்தொடர்பாக்கம், தானியங்கி, அதிவேகச் செய்தியனுப்புகை

**47.** ஊடகச் செய்தியொன்றின் சாரத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பெற்றுக்கொள்ள விமர்சனரீதியிலான பெறுநர் ஒருவரிடம் இருக்க வேண்டிய திறன்
(1) மதிப்பீடு ஆகும். (2) தொகுப்பாக்குதல் ஆகும்.
(3) பகுப்பாய்வு ஆகும். (4) குழுவாக்குதல் ஆகும்.
(5) சாராம்சப்படுத்தல் ஆகும்.

**48.** பின்வருவன பண்பாடு பற்றிய சில கூற்றுகளாகும்.
*A* - மானுட வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை அது இருந்துவருகின்றது.
*B* - அது, மேலெழுந்தவாரியான, எளிமையான மற்றும் பெருந்தொகைத் தயாரிப்புடனான பண்புகளைக் கொண்டிருக்கின்றது.
*C* - மானுடச் செயற்பாடுகளுடன் வேறுபிரித்தறிய முடியாத இணைப்பை அது கொண்டிருக்கின்றது.
*B* - தகவல், கருத்தியல், படைப்பாக்கம் மற்றும் தொடர்பாடல் சமூக வகிபங்கினை அது நிகழ்த்துகின்றது.
மேற்படி வரிசைக்கிரமத்தின்படி பண்பாட்டு வகைப்பாடுகளை எதிரொலிக்கும் சிறந்த விடையைத் தெரிவுசெய்க.
(1) பாரம்பரிய, நாட்டார், பிரசித்த, ஊடகப் பண்பாடுகள்
(2) பாரம்பரிய, பிரசித்த, நாட்டார், ஊடகப் பண்பாடுகள்
(3) நாட்டார், பாரம்பரிய, ஊடக, பிரசித்த பண்பாடுகள்
(4) நாட்டார், ஊடக, பாரம்பரிய, பிரசித்த பண்பாடுகள்
(5) ஊடக, பாரம்பரிய, பிரசித்த, நாட்டார் பண்பாடுகள்

[பக். 12 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**49.** பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வினாவுக்கு விடை எழுதுக.

| X | Y |
|---|---|
| 1. சமூக ஊடகம் | A - அதன் விரிவாக்கத்திற்கு குவிகை பங்களிக்கிறது. |
| 2. புதிய ஊடகம் | B - உத்தியோகபூர்வச் செய்திகளை முன்வைக்க இது உதவுகிறது. |
| 3. லிங்க்டின் (LinkedIn) | C - தொழில்சார் வலையமைப்பிற்கு இது உதவுகிறது. |
| 4. டுவிட்டர் (Twitter) | D - புதிய ஊடகத்தின் விருத்தி பெற்ற நிலை இது. |

**X** இற்கும் **Y** இற்கும் இடையிலான சரியான சோடி சேர்ப்பினை எடுத்துக்காட்டும் விடை எது?

(1) 1D, 2B, 3C, 4A
(2) 1A, 2B, 3D, 4C
(3) 1D, 2A, 3C, 4B
(4) 1B, 2C, 3A, 4D
(5) 1C, 2A, 3D, 4B

**50.** ஒரு மனிதனுக்கு போஷாக்கு, சுகாதாரம், வசிப்பிடம் மற்றும் மனித உரிமைகள் தேவைகளை நிறைவு செய்ய உதவும் தொடர்பாடல் அடையாளப்படுத்தப்படுவது

(1) சுயநிர்ணயம் என்பதாக ஆகும்.
(2) சமூகப் பங்காற்றுகை வளர்ச்சி என்பதாக ஆகும்.
(3) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய எதிர்பார்ப்புக்கள் என்பதாக ஆகும்.
(4) தேவைகளை மையப்படுத்தல் என்பதாக ஆகும்.
(5) சூழல் சமநிலை என்பதாக ஆகும்.

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

**NEW/OLD**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය **II**
**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II**
Communication & Media Studies **II**

**29 T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* இந்த வினாத்தாள் **பகுதி A, பகுதி B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
* **பகுதி A மூன்று** வினாக்களையும், **பகுதி B எட்டு** வினாக்களையும் கொண்டது.
* **பகுதி A பழைய, புதிய பாடத்திட்டங்கள்** என இரண்டு பகுதிகளுக்கும் பொதுவானது.
* **பகுதி B** இல் **4, 5, 6, 7** ஆம் வினாக்கள் **பழைய பாடத்திட்டத்திற்கும் 8, 9, 10, 11** ஆம் வினாக்கள் **புதிய பாடத்திட்டத்திற்கும்** அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.
* **பகுதி A** இலிருந்து ஏதாவது **இரண்டு** வினாக்களுக்கும், **பகுதி B** இலிருந்து ஏதாவது **மூன்று** வினாக்களுக்குமாக **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடையளிக்குக.

## பகுதி A

**1.** தொடர்பாடல் ஒரு சமூகச் செயன்முறையாகும்.

(i) பாடசாலைக்குள் முறைசார் தொடர்பாடல் இடம்பெறும் **இரண்டு** சந்தர்ப்பங்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) வெகுசன ஊடகங்களுக்கும் சமூக ஊடகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) நீங்கள் விரும்பும் வெகுசன ஊடகம் எதையாவது பயன்படுத்தி, தொடர்பாடல் செயன்முறையின் முக்கிய கூறுகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

**2.** (i) பிரசித்த பண்பாட்டின் இயல்புகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடக விளங்கறிவு ஏன் தேவையானது என்பதை, **இரண்டு** காரணங்களைத் தந்து சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஷ்ராம் - ஒஸ்கூட் மாதிரியின் **மூன்று** முக்கிய இயல்புகளைத் தனித்தனியாக விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) புதிய நூலக நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிக்க உங்களது பாடசாலை திட்டமிடுகிறது. இந்தத் திட்டத்தை பிரசித்தப்படுத்தப் பயன்படக்கூடுமான நாட்டார் அம்சங்கள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டு** மேற்படியாக எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**3.** தொடர்பாடல் செயன்முறையை அடையாளங்காண்பது பெறுநரின் திறனாற்றல் ஆகும்.

(i) கிராமிய அபிவிருத்திக்குப் பயன்படக் கூடிய வானொலி நிகழ்ச்சி வடிவங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) தற்கால வெகுசன ஊடகங்களில் பயன்படும் **இரண்டு** தணிக்கை முறைகளை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடகப் பண்பாட்டினால் உருவாக்கப்படும் புதிய சமூகத் தேவைகளின் நன்மை மற்றும் தீமையான விளைவுகள் **இரண்டு** வீதம் தனித்தனியாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) அனர்த்த நிலைமைகளில், ஊடகங்கள் எவ்விதம் அவசியம் செயற்பட வேண்டும் என்பதைப் பின்வரும் வழிகாட்டல்களைப் பயன்படுத்தி, உதாரணங்களுடன் விளக்குக.

* தகவற் செயற்பாடு
* கல்விச் செயற்பாடு
* தூண்டற் செயற்பாடு
* சமூக அமைப்புச் செயற்பாடு

(16 புள்ளிகள்)

## பகுதி B

**4.** மொழிக்கும் வெகுசன ஊடகங்களுக்கும் இடையே நெருங்கிய உறவு காணப்படுகிறது.

(i) வாழும் மொழியொன்றுக்குரிய **நான்கு** பண்புகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடக அறிக்கையொன்றைத் (press release) தயாரிக்கும்போது, கவனத்திற்கொள்ள வேண்டிய **இரண்டு** அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) பிரதான மொழியொன்றிலிருந்து துணைமொழி வேறுபடும் **மூன்று** இயல்புகளை விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) வரலாற்றுரீதியான ஊடக விமர்சனப் பிரவேசத்தின் **நான்கு** பண்புகளைத் தொலைக்காட்சித் தொடர்களிலிருந்தான உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (16 புள்ளிகள்)

**5.** படைப்பாக்கச் சிந்தனையும் சகவாழ்வும் சமூக விருத்திக்கு முக்கியமானவையாகும்.

(i) ஊடக விமர்சகர் ஒருவருக்கு இருக்கவேண்டிய **இரண்டு** பண்புகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடக வன்முறை உள்ளக அமைதியைப் பாதிக்கும் **இரண்டு** வழிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) தொலைக்காட்சிகளை நோக்கிப் பார்வையாளர்களைக் கவர வைப்பதற்காக ஊடக வன்முறையைப் பயன்படுத்தும் நிகழ்ச்சி வகைகள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) அபிவிருத்தி பற்றிய எவரெட் எம். ரோஜர்ஸின் பின்வரும் சிந்தனைகளைத் தற்கால உதாரணங்களுடன் ஆராய்க.

(a) புத்தாக்கங்களின் பரவல்

(b) தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்தல் (16 புள்ளிகள்)

**6.** ஊடக விளங்கறிவு பல்வேறு திறன்களின் ஒருங்குசேர்க்கையாகும்.

(i) ஊடகக் கல்வி வழங்கப்படுவதன் நோக்கங்கள் **இரண்டினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) படைப்பாக்க நடிப்பு மற்றும் படைப்பாக்கப் பேச்சு ஆகியவற்றைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடக விளங்கறிவு கொண்டுள்ள திறன்கள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) படைப்பாக்கச் செய்தியொன்றை முன்வைப்பது தொடர்பில் கவனிக்கவேண்டிய **நான்கு** அம்சங்களை விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka ,

**7.** புதிய நூற்றாண்டின் சிறார்கள் பாரம்பரிய ஊடகங்கள், புதிய ஊடகங்கள் என இரண்டையும் சமநிலையாகப் பயன்படுத்தக் கூடியவாறு அவர்களுக்குக் கல்வியூட்டுவது முக்கியமானதென பாடசாலை வைபவத்தில் பிரதம விருந்தினர் தெரிவித்தார்.

(i) வரலாற்றுக்கு முந்தைய கால கட்டத்தில் பாரம்பரியத் தொடர்பாடலில் பயன்படுத்தப்பட்ட காட்சிக் குறியீடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) வாய்மொழித் தொடர்பாடலின் **இரண்டு** இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) பாரம்பரிய ஊடகங்களில் பயன்படுத்தப்படும் விசேட பண்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) புதிய ஊடகத்தில் பயன்படும் மொழியினால், தேசிய மொழிகள் எவ்வாறு சவால்களுக்கு ஆட்படுகின்றன என்பதைப் பின்வரும் அம்சங்களைப் பயன்படுத்தி, உதாரணங்களுடன் விபரிக்குக.

* சுருக்கமான பதங்கள்
* கலப்பு மொழி
* தவறான மொழிப்பாவனை
* ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி, சொந்த மொழிகளை எழுதுதல் (16 புள்ளிகள்)

**8.** எதிர்வரவுள்ள தனது ஓவியக் கண்காட்சி பற்றி செய்திப்பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் வழங்கிய அகிலன், தனது கண்காட்சிக்கான அனுசரணையாளர் ஒருவருக்காகத் தான் காத்திருப்பதாகக் கூறினார். (04 புள்ளிகள்)

(i) லியனார்டோ டாவின்சியினால் குறிப்பிடப்பட்ட படைப்பாக்கத்திற்கான காரணிகளில் **நான்கினைப்** பெயரிடுக. (08 புள்ளிகள்)

(ii) வியாபார பொதுசனத் தொடர்பின் வழியாகத் தனது நற்பெயரை விருத்தி செய்வதற்காக நிறுவனமொன்று பயன்படுத்தும் **இரண்டு** உபாயங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (12 புள்ளிகள்)

(iii) ஓவியக் கண்காட்சிக்காக நிகழ்வு முகாமையாளர் ஒருவர் பயன்படுத்தப்படுவாரெனில், அந்நிகழ்வில் அவரது கடமைகள் **மூன்றினை** விவரிக்குக.

(iv) செய்திப் பத்திரிகைகளில் படைப்பாக்க மொழியைப் பயன்படுத்துவதைப் பின்வருவனவற்றின் பேரில் உதாரணங்களுடன் விபரிக்குக.

* தலையங்கங்கள்
* சித்திரிப்புக் கட்டுரைகள் (16 புள்ளிகள்)

**9.** பூகோள அபிவிருத்திப் பிரச்சினைகளை புதிய பரிமாணங்களின் ஊடாகக் கற்பது, தொடர்பாடல் அணுகுமுறைகளை விருத்திசெய்ய வழிசெய்கிறது.

(i) இடைத்தொடர்பு விருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையினால் இனங்காணப்பட்டுள்ள தொடர்பாடல் பிரவேசங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) கிராமப் பகுதிகளில் அபிவிருத்திப் பிரச்சினைகளை அடையாளங்காண்பதற்கு ஆய்வினைப் பயன்படுத்துவதன் **இரண்டு** நன்மைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய ஆய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளும்போது, களத்தில் பின்பற்ற வேண்டிய ஆய்வு அறநெறிப் பயிற்சிகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) அபிவிருத்திச் செயன்முறையொன்றில் பங்கேற்பு ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் **நான்கு** அம்சங்களை விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**10.** (i) தென்கிழக்கு ஆசியாவில் முதற்தடவையாக வானொலி அறிமுகஞ்செய்யப்பட்ட நாட்டினையும் தசாப்தத்தினையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் கமெரா எடுப்புக்கள் சினிமாவில் பொருத்தமான வகையில் இடம்பெறும் சூழ்நிலைகளை விளக்குக.

(a) இடைநிலை எடுப்பு

(b) நீள் எடுப்பு (08 புள்ளிகள்)

(iii) பண்பாட்டிடை விழிப்புணர்வை வலுப்படுத்த சினிமா பயன்படக் கூடுமான வழிகளை **மூன்று** அம்சங்களினூடாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) சினிமாப் படைப்புக்களில் புலமைச் சொத்துச் சட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பின்வரும் அம்சங்களின்பேரில் கலந்துரையாடுக.

(a) பொருளாதார உரிமைகள்

(b) நியாயமான பாவனை (16 புள்ளிகள்)

**11.** ஊடகங்களில் புதிய போக்குகளுடன் கட்டுப்பாடுகளும் கொள்கைகளும் விரிவாக்கம் பெறுகின்றன.

(i) நாட்டின் ஊடகக் கொள்கையை விருத்திசெய்யும்போது கவனஞ்செலுத்த வேண்டிய **இரண்டு** அம்சங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கை ஊடகப் பெறுநர்கள் தொடர்பில் **இரண்டு** புதிய போக்குகளை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடகக் கட்டுப்பாடுகளுக்குப் பொறுப்பான **மூன்று** அமைப்புக்களைப் பெயரிட்டு, அவற்றின் வகிபங்குகளை விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஊடகப் பிரவேசப் போக்குகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (16 புள்ளிகள்)

* * *



Department of Examinations Sri Lanka